மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இராணுவத்தில் பணியாற்றியவர்கள் உள்ளபடியே நாட்டுக்காகப் பணியாற்றியவர்கள் ஆகிறார்கள். ஆகவே, எம். டி. போன்ற உயர்படிப்புக்குச் சேர்க்கும்போது இப்படி இராணுவத்தில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பிய டாக்டர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேல் படிப்புக்கு விண்ணப்பிக்கும்போது பொதுவாக அவர்களுடைய நீண்ட கால சர்வீஸ் கருத்தில் கொள்ளப்படுகிறது. இராணுவத்தில் போய் பணியாற்றிவிட்டு அரசாங்கப் பணியில் இருந்தால் அவர்களுக்கு ஐந்தாண்டு, எட்டாண்டு பணிப் பயிற்சி ஏற்பட்டு விடுகிறது. அவர்களுக்குச் சில முன்னுரிமைகள் வரும். அவர்கள் இராணுவத்தில் பணியாற்றியதும் இதுகுறித்து கருத்தில் கொள்ளப்படும். ஆனால், எண்ணிக்கை அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு முன்னுரிமை இருக்கிறது. மேல் படிப்பில் இவைகளைக் கவனிப்பது அவ்வளவாக இயலாது. ஆனாலும், அவர்கள் சலுகை அளிக்கப்படுகிறார்கள் என்பது பொதுவான நிலைமை.

திருக்குவளையில் உள்ள மருந்தகம்.

* 331 வினா.—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்தை படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்திற்குத் தனியார் யாரேனும் உதவி அளித்திருக்கிறார்களா? திருக்குவளை முக்கியமான ஊர் என்ற காரணத்தால் திருக்குவளை அரசினர் மருந்தகத்தை இனிமேலாவது விரிவுபடுத்துவது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

---

† 690–695-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1975 மார்ச் 15]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசினர் இதை மேற்கொண் டிருந்தாலும், அதற்கென்று சில சொற்றொடர்கள் பயன்படுத்தப்படு கின்றன. "மருந்தகம்" என்ற சொல்லுக்கு "டிஸ்பென்சரி" என்று அர்த்தம். டிஸ்பென்சரியை ஆஸ்பத்திரியாக்க வேண்டுமென்றால், அது வேறு கட்டத்திலேதான் பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மருத்துவமனை அமைக்கிற அளவு அங்கே மக்கள் தொகை—சுற்றுப் புறக் கிராமங்களில் அமைந்திருப்பதாலும், தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே திருக்குவளை எல்லோருடைய உள்ளத்திலும் நிறைந்திருப்பதாலும் அதை முதலமைச் சருடைய ஊர் என்பதாலும் அபிவிருத்தி செய்யமாட்டேன் என்கிறார்களா ? அல்லது அங்கிருக்கிற மக்கள் இவர் அங்கே பிறந்த காரணத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திருக்குவளையைப் பொறுத்த வரையில், கலைஞர் கருணாநிதி அவர்களேகூட அங்குள்ள ஏழை மக்களுக்காக பத்தாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்து தாய்-சேய் நல விடுதி ஆரம்பித்திருக்கிறார்கள். மொத்தமாக—முதலமைச் சருக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர். (சிரிப்பு)

Link roads for Villages.

*332 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a special programme to connect even small hamlets with main roads ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தற்போது எந்த வகைச் சாலைகளாலும் இணைக்கப்பட்டிராத கிராமங்கள், சிற்றூர்கள் அனைத்துக்கும், மழை பெய்யாத காலத்தே பயன் படும் கப்பிச் சாலைகளை அமைப்பதற்கான விரைவுத் திட்டமொன்றை மூன்றாண்டுக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கும் திட்டமாக மேற் கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 1,194.24 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 9,575.80 கி. மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்படும். இவற்றால் மொத்தம் 5,485 கிராமங்கள் பயனடையும். திட்டத்தின் முதனிலையில், 3,698 கி. மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்க, மொத்தம் ரூ. 429.62 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் மூலம், மொத்தம் 2,414 கிராமங்கள் பயனடையும்.